www.Padasalai.Net www.TrbTnpsc.com

# ஒரு மதிப்பெண் சிறப்புத் தேர்வு

## நாகப்பட்டினம் மாவட்ட பள்ளிகல்வித் துறை

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் : 10407

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

**சரியானவிடையைத்தேர்ந்தெடுத்துஎழுதுக:**

1. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி - என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
3. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.
   தலைப்பு : செயற்கை நுண்ணறிவு
   குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன் பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிக்கிறது.
   அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
   ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது
   இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
   ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.
4. செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
   செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே
   செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!
   அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
   இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
5. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
   அ) பாடிய கேட்டவர் ஆ) கேட்டவர் பாடிய
   இ) கேட்டவர் பாடிய ஈ) பாடல் கேட்டவர்
6. அருந்துணை என்பதைப் பிரித்தால் _______.
   அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை
7. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க
   அ) கொண்டல் - 1. மேற்கு
   ஆ) கோடை - 2. தெற்கு
   இ) வாடை - 3. கிழக்கு
   ஈ) தென்றல் - 4. வடக்கு
   அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2
8. கூற்று 1: போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
   கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.
   அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
   இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி
9. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
10. "தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -
    அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
    இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்



11. காசிக்காண்டம் என்பது
    அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
    ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
    இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
    ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
12. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது
    அ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார் ஆ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்
    இ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
    ஈ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
13. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி - என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
    அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
    இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
14. "விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்" என்கிறது புறநானூறு - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
    அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
    இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
15. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா" - என்று வழிப்போக்கர் கேட்டது ________.
    "அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது _______.
    அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் விடை ஆ) அறிவினா, மறை விடை
    இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
16. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் _______.
    அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
    இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
17. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
    அ) கூவிளம், தேமா, மலர் ஆ) தேமா, புளிமா, காசு
    இ) கூவிளம், புளிமா, நாள் ஈ) புளிமா, தேமா, பிறப்பு
18. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
    அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
    இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் இ) அங்கு வறுமை இல்லாததால்
19. மெத்த வணிகலன் - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
    அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
    ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
    இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
    ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
20. <u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிடப்பட்ட பகுதி குறிப்பிடுவது
    அ) இலையும் சருகும் ஆ) தாளும் ஓலையும் இ) தோகையும் சண்டும் ஈ) சருகும் சண்டும்
21. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
    உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
    அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
22. <u>பெரியமீசை</u> சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
    அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



23. பின்வருவனவற்றுள் முறையான தொடர்

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடம் உண்டு

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடம் உண்டு

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடம் உண்டு

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடம் உண்டு

24. "பிரிந்தன புள்ளின் கானில்
பெரிதழுது இரங்கித் தேம்ப"
பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க

அ) கிளை, துளை ஆ) நிலம், வாட இ) காடு, வாட ஈ) காடு, நிலம்

25. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

26. "உனதருளே பார்ப்பன் அடியேனே" - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

27. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

28. குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே -

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

29. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

30. மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் - என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

31. "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

32. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

33. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ?

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

34. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப்பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்



35. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

36. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ______ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ______.

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

37. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ______.

அ) நாட்டைக் கைப்பற்றுதல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

38. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டுவிழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது - இத்தொடருக்கான வினா எது?

அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?

ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

இ) தூக்குமேடை என்பது திரைப்படமா- நாடகமா? ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

39. பூக்கையைக் குவித்து பூவே புரிவோடு காக்க என்று ________, ________ வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

40. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

41. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

42. மேன்மை தரும் அறம் என்பது

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது ஆ) புகழ் கருதி அறம் செய்வது

இ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

ஈ) பதில் உதவி பெறுவதற்காக அறம் செய்வது

43. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

44. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதியன் சேரலாதன் ஆ) அதியன்: பெருஞ்சாத்தன்

இ) பேகன் கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்: திருமுடிக்காரி

45. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

46. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

47. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம் -

அ) மொட்டின் வருகை ஆ) வனத்தின் நடனம் இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு

48. புதுக்கோட்டை, உதகமண்டலம், புதுச்சேரி, சைதாப்பேட்டை - இவ்வூர்ப் பெயர்களின் மரூஉ வரிசையைத் தேர்க.

அ) ஊட்டி, புதுகை, புதுகை, சைதை ஆ) புதுகை, உதகை, புதுவை, சைதை

இ) புதுவை, உதகை, புதுகை, சைதை ஈ) புதுகை, புதுவை, உதகை, சைதை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



49. கானடை - என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக.
அ) கான் அடை - காட்டைச் சேர் ஆ) கால் உடை - காலால் உடைத்தல்
இ) கான் நடை - காட்டுக்கு நடத்தல் ஈ) கால் நடை - காலால் நடத்தல்

50. "சாகும் போதும் தமிழ்ப் படித்துச் சாக வேண்டும் என்றன்
சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" - என்று கூறியவர்
அ) பாரதியார் ஆ) க. சச்சிதானந்தன் இ) நப்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்

51. கலைஞர் தன்னுடைய முதல் கட்டுரையை எழுதிய இதழ்
அ) மாணவ நேசன் ஆ) திராவிட நாடு இ) முரசொலி ஈ) சுதேசமித்திரன்

52. பொருள்கோள் எத்தனை வகைப்படும்?
அ) ஆறு ஆ) ஐந்து இ) ஏழு ஈ) எட்டு

53. "கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும்" - பாரதியார் இப்பாடலடியில் இடம் பெற்றுள்ள வழுவமைதி
அ) திணை வழுவமைதி ஆ) பால் வழுவமைதி
இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

54. பாடி மகிழ்ந்தனர் - எவ்வகைத் தொடர் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர்

55. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க
அ) கரு ஆ) கஉ இ) எஅ ஈ) உரு

56. சந்தக்கவிமணி என அழைக்கப்படுபவர்
அ) செய்குதம்பிப் பாவலர் ஆ) ம.பொ.சி இ) தமிழழகனார் ஈ) பெருஞ்சித்திரனார்

57. "காலம் கரந்த பெயரெச்சம்" என்பது
அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

58. செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய இசைக்காக அளபெடுப்பது
அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

59. ஆநிரைகளை கவர்ந்து வர வெட்சிப் பூவினை வீரர்கள் சூடிக்கொண்டு செல்வர். வெட்சிப்பூ தற்காலத்தில் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.
அ) இட்லிப்பூ ஆ) வாகைப்பூ இ) கனகாம்பரம் ஈ) செம்பருத்தி

60. சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - என்று பாடியவர்
அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) கவிமணி

61. பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை
அ) 305 ஆ) 691 இ) 105 ஈ) 481

62. கண்ணதாசனின் சேரமான் காதலி என்னும் புதினத்திற்குக் கிடைத்த விருது
அ) அண்ணா விருது ஆ) நோபல் விருது
இ) சாகித்திய அகாதமி விருது ஈ) இந்திய மாமணி விருது

63. "வால்காவிலிருந்து கங்கை வரை" என்னும் நூலின் ஆசிரியர்
அ) கணமுத்தையா ஆ) வைரமுத்து இ) ராகுல் சாங்கிருத்யாயன் ஈ) யூமா வாசுகி

64. "இல்லோர் ஒக்கல் தலைவன்" - "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்படுவோர் -
அ) வள்ளல் ஆ) மன்னர் இ) அமைச்சர் ஈ) படைத்தளபதி

65. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர்
அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா. இளங்குமரனார்



66. "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" - என்று கூறியவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) சுரதா ஈ) கவிமணி

67. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்
அ) திரு. பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ. நேசமணி இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந. முத்துசாமி

68. தமிழ்த்தொண்டு என்னும் தொடர்
அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை
இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ) வேற்றுமைத்தொகை

69. ஓங்கு - என்ற அடைமொழியைக் கொண்ட சங்க இலக்கிய நூல்
அ) குறுந்தொகை ஆ) பரிபாடல் இ) கலித்தொகை ஈ) நற்றிணை

70. "செங்காந்தள்" என்ற சொல்லில் அமைந்துள்ள தொகையைத் தேர்க
அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

71. "காலின் ஏழடிப் பின் சென்று" - என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி
அ) விருந்தினரின் காலைத்தொட்டு வணங்கினர்
ஆ) விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்
இ) ஏழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்
ஈ) ஏழு நாள்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்புவர்

72. அனைவருக்கும் மோர்ப்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும் - அடிக்கோடிட்ட சொற்களின் தொடர்வகையைத் தேர்க.
அ) வேற்றுமைத்தொகை, வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, அன்மொழித்தொகை
இ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை, வேற்றுமைத்தொகை
ஈ) வேற்றுமைத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி***

"சக்தி குறைந்து போய், அதனை அவித்து விடாதே
பேய்போல வீசி அதனை மடித்து விடாதே
மெதுவாக, நல்ல லயத்துடன்,
நெடுங்காலம் நின்று வீசிக் கொண்டிரு
உனைக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"

73. இப்பாடலில் இடம் பெற்றுள்ள "லயத்துடன்" என்ற சொல்லின் பொருள்
அ) சுழலாக ஆ) கடுமையாக இ) சீராக ஈ) வேகமாக

74. பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களைத் தேர்க
அ) அவித்து விடாதே, நெடுங்காலம் ஆ) மடித்து விடாதே, பாடுகிறோம்
இ) மெதுவாக, லயத்துடன் ஈ) பாடுகிறோம், கூறுகிறோம்

75. இக்கவிதையை இயற்றியவர்
அ) திரு.வி.க. ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) மு. மேத்தா

76. நெடுங்காலம் என்ற சொல்லைப் பிரித்தால் கிடைப்பது
அ) நெடுமை + காலம் ஆ) நெடிய + காலம் இ) நெடு + காலம் ஈ) நெடுங் + காலம்

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி***

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"

77. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு இ) பரிபாடல் ஈ) தனிப்பாடல் திரட்டு

Padasalai

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



78. பாடலில் இடம் பெற்றுள்ள பொருத்தமான அணி
அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப் புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

79. தமிழுக்கு இணையாகப் பாடலில் பொருத்தப்படுவது
அ) சங்கப்பலகை ஆ) கடல் இ) கதவு ஈ) புலவர்கள்

80. தொழிற்பெயர் அல்லாத சொல்
அ) துய்ப்பதால் ஆ) மேவலால் இ) அணிகலன் ஈ) கண்டதால்

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி***

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று"

81. பாடல் இடம்பெற்ற நூல்
அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு இ) வெற்றிவேற்கை ஈ) கொன்றைவேந்தன்

82. பாடலின் சீர் மோனைச் சொற்கள்
அ) அருளை, அருத்துவதும் ஆ) அருளை, அறிவை
இ) அகற்றி, அருந்துணையாய் ஈ) அறிவை, அகற்றி

83. அருந்துணையாய் - இச்சொல்லைப் பிரித்தால்
அ) அருந்துணை + யாய் ஆ) அருந்து + துணையாய்
இ) அருமை + துணையாய் ஈ) அரு + துணையாய்

84. உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது
அ) அன்பு ஆ) கல்வி இ) மயக்கம் ஈ) செல்வம்

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி***

"நனந்தலை உலகம் வளைடி நேமியொடு
வலம்புரி பொறித்த மாகசாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇயமிழ் பணிக்கடல் பருகி வலன் ஏர்பு"

85. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) பரிபாடல் ஈ) மெய்க்கீர்த்தி

86. நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம் இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

87. இப்பாடலின் ஆசிரியர்
அ) ஔவையார் ஆ) நப்பூதனார் இ) நலவேட்டனார் ஈ) கீரந்தையார்

88. தடக்கை - இலக்கணக் குறிப்பு
அ) உம்மைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உரிச்சொற்றொடர் ஈ) வினையாலணையும் பெயர்

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி***

"தென்னன் மகளே திருக்குறளின் மாண்புகழே,
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே,
மன்னுஞ் சிலம்பே மணிமே கலைவடிவே
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"

89. தென்னன் - என்ற சொல்லின் பொருள்
அ) பாண்டியன் ஆ) பல்லவன் இ) சேரன் ஈ) சோழன்

90. நற்கணக்கே! - இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) விளித்தொடர் இ) உரிச்சொற்றொடர் ஈ) உருவகம்



91. இப்பாடலின் ஆசிரியர்
அ) தமிழழகனார் ஆ) பெருஞ்சித்திரனார் இ) பாரதியார் ஈ) பாவாணர்

92. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளைத் தேர்ந்தெடுக்க
அ) தென்னன் - திருக்குறளின் ஆ) எண்தொகையே - மணிமேகலை
இ) இன்னறும் - மன்னுஞ் ஈ) முன்னும் - முடிதாழ

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி***

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

93. இப்பாடலின் ஆசிரியர்
அ) உமா மகேஸ்வரி ஆ) வேணுகோபாலன் இ) கண்ணதாசன் ஈ) வைரமுத்து

94. அவனும் யானுமே - இத்தொடரில் அவன் என்ற சொல் யாரைக் குறிக்கிறது?
அ) கவிஞரை ஆ) கடவுளை இ) நண்பரை ஈ) தந்தையை

95. அளித்தல் - இலக்கணக் குறிப்பு.
அ) பண்புத்தொகை ஆ) உரிச்சொல் இ) தொழிற்பெயர் ஈ) வினையெச்சம்

96. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகள்
அ) ஆக்கல், அவனும் ஆ) இவைசரி, இவைதவ
இ) அவனும் அறிந்தவை ஈ) பொன்னினும் - யென்றால்

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி***

"செம்பொ னடிச்சிறு கிங் கிணியொடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்"

97. பாடலின் இலக்கிய வகை
அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்
இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

98. கிண்கிணி - என்னும் அணிகலன்
அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது
இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

99. குண்டலமும் குழைக்காதும் - இலக்கணக் குறிப்பு தருக
அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

100. சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடு
அ) பட்ட, பொட்டொடு ஆ) சரிந்தாட, பதிந்தாட
இ) செம்பொன், பைம்பொன் ஈ) பண்டி, குண்டலம்

******

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com